**O.S No. :** 71/2018

**DATE :** 07.08.2024

**NAME :** போஸ் த/பெ.வரதராஜன்

**வா.சா. 1 குறுக்கு விசாரணை – 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்**

1) எனக்கு சொந்த ஊர் எது என்றால் பெரிய நத்தம் காஞ்சிபுரம் மாவட்டம் ஆகும். வழக்கு சொத்து எந்த ஊரில் இருக்கிறது என்றால் கொளத்தூர் கிராமம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. கொளத்தூர் கிராமத்திற்கும் பெரிய நத்தம் கிராமத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 6 கி.மீ தூரம் இருக்கும். நான் வழக்கு சொத்தை எந்த வருடம் எவ்வளவு விஸ்திரனத்திற்கு வாங்கினேன் என்றால் 1981 ஆம் ஆண்டு 3 ஏக்கர் விஸ்திரனத்திற்கு கிரையம் வாங்கினேன்.

2) நான் வழக்கு சொத்து விவரத்தில் 3 ஏக்கராவையும் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். 3 ஏக்கராவையும் ஒரே சர்வே எண்ணில் இருக்கிறதா வெவ்வேறு சர்வே எண்ணில் இருக்கிறதா என்றால் தனி தனி சர்வே எண்ணில் இருக்கிறது. பிரதிவாதிகளின் வழக்கிறஞர் வாதுரையை காண்பித்து வழக்கு சொத்து விவரத்தில் 64 சென்ட் மட்டுமே காண்பித்து இருப்பதாக சுட்டி காட்டினார் அதை சாட்சி சரி என்று ஒத்து கொண்டார். சர்வே எண் 79 ல் 64 சென்ட் எனக்கும் 35 சென்ட் பிரதிவாதிகளுக்கும் உரிமையுடையது என்றால் சரிதான்.

3) பிரதிவாதிகளின் 35 சென்ட் என் நிலத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் மேல்பக்கம் உள்ளது. நான் வழக்கு சொத்தில் எந்த வருடத்தில் இருந்து பயிர் வைக்கவில்லை என்றால் வழக்கு தாகக்ல் செய்ததிலிருந்து நான் பயிர் வைக்கவில்லை.

அதற்கு முன்பாக பயிர் வைத்திருந்தேனா என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 6 வருடங்கள் நான் பயிர் வைத்திருந்தேன்.

4) நான் எப்பொழுது பயிர் வைக்க நிறுத்தி விட்டேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆறு மாதங்கள் முன்பாக நிறுத்திவிட்டேன். என் 64 சென்ட் நிலத்தையும் பிரதிவாதிகளின் 35 சென்ட் நிலத்தையும் பிரிக்க வரப்பு இருக்கிறதா என்றால் இருக்கிறது. நானும் பிரதிவாதிகளும் உறவுகாரர்கள் என்றால் சரிதான். நான் மேற்படி வரப்பை நான் உபயோகிக்கிறேன் என்று வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வரப்புக்கு வடக்கில் தண்ணீர் கால்வாய் செல்கிறது அதையும் நான் தான் உபயோகிக்கிறேன்.

5) மேற்படி தண்ணீர் கால்வாயின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண் 80 ஆகும். நான் தாக்கல் செய்த வா.சா. ஆ 4 முதல் வா. சா ஆ 8 வரை ஆவணங்களில் மேற்படி தண்ணீர் கால்வாயை காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்படவில்லை. மேற்படி தண்ணீர் கால்வாய் பொது கால்வாயா அல்லது தனிப்பட்ட கால்வாயா என்றால் அது கிராம பொது கால்வாய் ஆகம்.

6) வா.சா.ஆ 5 மற்றும் வா.சா.ஆ 6 ஆவணத்தில் சர்வே எண் 79 என் நிலத்தில் பஞ்சர் ( பஞ்சர் என்பது அந்த நிலத்தில் சாகுபடி எதுவும் செய்யப்படவில்லை என்பது பொருள் என்று பிரதிவாதிகளின் வழக்கறிஞர் கூறினார் அதை சாட்சியும் ஆமாம் என்று ஒப்பு கொண்டார் ) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தில் சர்வே எண் 80 ல் தண்ணீர் கால்வாய் இருப்பது காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7) சர்வே எண் 80 ல் தண்ணீர் கால்வாய் இருக்கிறது என காண்பிக்க என் வாக்குமூலம் மட்டுமே ஆதாரம் என்றால் சரிதான். நான் தண்ணீர் கால்வாய் பொதுவானது என கூறும் போது பிரதிநிதித்துவம் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி கால்வாய் இருப்பதை காண்பிக்க வழக்கறிஞர் ஆணையர் நியமிக்க கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) பிரதான சாலையானது என் நிலத்திலிருந்து எவ்வளவு நிலம் தள்ளி உள்ளது என்றால் 10 நிலங்கள் தள்ளி கிராம பிரதான சாலை உள்ளது. ஆனால் சர்வே எண் 80 ல் ஒரு கார் செல்லக்கூடிய அளவுக்கு பாதை உள்ளது. என் நிலத்தின் வரப்பு எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் 3 அடி அகலம் இருக்கும். அதே போல் ஒவ்வொரு நிலத்திற்காரருக்கும் வரப்பு இருக்கிறது என்றால் சரிதான். சர்வே எண் 79 ல் உள்ள 35 சென்ட் நிலமும், சர்வே எண் 80 ல் உள்ள நிலமும் பிரதிவாதிகளின் நிலங்கள் என்றால் சரிதான்.

9) சர்வே எண் 80 ல் பொது வழி பாதை இருப்பதாக நான் தாக்கல் செய்த வருவாய் ஆவணங்களில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Typewritten by the typist in open court to my dictation and to my bearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct**

**Sd/-P.T.Satheesh Kumar**
**Principal District Court,**
**Kancheepuram**